Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC.315/2012** |
| **Sessions** | **:** | |
| **Deposition of witness for** | **:** | **Prosecution PW 1** |
| **Name** | : | கருணாகரன் |
| **Father's/Husband's Name** | **..** | ஏகாம்பரம் |
| **Village** | | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | **48** |

**Date :22.08.2024**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி 1 நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி 2 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் எர்ணாவூர் பகுதியில் வசித்து வருகிறேன். ஓட்டுநர் வேலை பார்த்து வருகிறேன். சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு, ஜோதி நகரில் உள்ள ஏ பி சி என்ற நிறுவனத்தில் நான் வேலை பார்த்து வந்தேன். அப்போது அங்கு

வேலை பார்த்து வந்த முருகன் என்ற நபருக்கு விபத்து ஏற்பட்டு இருந்ததாக போன் மூலம் எனக்கு தகவல் கொடுத்தார்கள். நான் நேரடியாக ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது அந்த நபர் உயிருடன் இல்லை. புகார் கொடுக்கப்பட்டது. இரண்டு தினங்களுக்கு பிறகு, காவல் நிலையம் அழைத்தார்கள். என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். (பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது).

கற்றறிந்த அரசு தரப்பு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கும்படி கோரிக்கை விடுத்தார். பரிசளிக்கப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 25.04.2014 அன்று விபத்து சம்பந்தமாக போலீசார் நிறுவனத்திற்கு வந்து காலை சுமார் 10 மணியளவில் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதற்கு நான் சாட்சியாக இருந்தேன் என்று போலீசாரிடம்

கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் எதிரியை விடுவிக்கும் நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Clr.No.19

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR</u>**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC.315/2012** |
| **Sessions** | **:** | |
| **Deposition of witness for** | **:** | **Prosecution PW 2** |
| **Name** | : | பழனிவேல் |
| **Father's/Husband's Name** | **..** | சுப்பிரமணி |
| **Village** | | |
| **Taluk** | **..** | |
| **Caste** | **..** | |
| **Calling** | **..** | |
| **Religion** | **..** | |
| **Age** | **..** | **36** |

**Date :22.08.2024**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

எதிரி 1 நீதிமன்றத்தில் ஆஜர். எதிரி 2 நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:-

1. நான் பூம்புகார் நகரில் வசித்து வருகிறேன். ஆப்பரேட்டர் வேலை பார்த்து வருகிறேன். 12 வருடங்களுக்கு முன்பு, நான் ஏபிசி நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தேன் அப்போது எனக்கு பணி ஓய்வு நேரம். அங்கு வேலை

பார்த்த முருகன் என்ற நபரை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எதற்காக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். (பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

கற்றறிந்த அரசு தரப்பு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கும்படி கோரிக்கை விடுத்தார். பரிசளிக்கப்பட்டது. சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

2. கடந்த 25.04.2014 அன்று விபத்து சம்பந்தமாக போலீசார் நிறுவனத்திற்கு வந்து காலை சுமார் 10 மணியளவில் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரிதான்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

3. என் முன்னிலையில் போலீசார் நான் சாட்சியம் அளித்தவாறு பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றும் காவல் நிலையத்தில் என்னை அழைத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான்.